**05.01.2026**

**CC 361/2023**

**PW.1. Harish S/o. Ramesh.**

**எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**
**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை :**

நானும் ஆஜர்எதிரியும் நண்பர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் நானும், ஆஜர் எதிரியும் ஒன்றாக சேர்ந்துதான் கச்சேரியை பார்க்க சென்றோம் என்றால் சரிதான். பாட்டு கச்சேரி நடப்பதற்கு முன்பு வரை நானும், ஆஜர் எதிரியும் நல்ல முறையில் பழகி வந்தோம் என்றால் சரிதான். பாட்டு கச்சேரி நடந்து கொண்டிருந்தபோது நானும் ஆஜரு்எதிரியும் இருட்டான ஒரு இடத்தில் தனியாக பேசிகொண்டிருந்தோம் என்றால் சரிதான். அந்த சமயத்தில் வாய் தகராறு ஏற்பட்டதன் காரணமாக 7, 8 நபர்கள் ஒன்றாக சேர்ந்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

7, 8 நபர்கள் ஒன்றாக சேர்ந்துவிட்டதால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது என்றால் சரிதான். தள்ளுமுள்ளு ஏற்பட்டதில் நான் கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். சம்பவ இடம் இருட்டாக இருந்ததால் காயம் யாரால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் தொடர்பாக போலிசார் என்னை விசாரணை செய்தபோது எழுதாத வெள்ளைதாளில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவம் தொடர்பாக போலிசார் என்னை மறுபடியும் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

**Sd/-R.Saranya.,**
**Judicial Magistrate,**
**Gudiyatham.**